ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2298/53 - 2022 සැප්තැම්බර් මස 23 වැනි සිකුරාදා - 2022.09.23

*2298/53 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்

**அரச இரகசிய சட்டக் கோவை**

*1955 ஆம் ஆண்டின் 32 ஆம் இலங்கம் கொண்ட அரச இரகசிய சட்டக் கோவையின் 2 ஆவது பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களால் விடுக்கப்படுகின்ற கட்டளை.*

**ரணில் விக்ரமசிங்க,**
சனாதிபதியும் பாதுகாப்பு அமைச்சரும்,
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு.

கொழும்பு,
*2022*, செத்தெம்பர் *16*.

**கட்டளை**

*1.* இந்தக் கட்டளை 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கம் கொண்ட அதி உயர் பாதுகாப்பு வலய கட்டளை என அழைக்கப்படும்.

*2.* இந்தக் கட்டளைகளின் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் ஒருங்கிணைந்த உயர் பாதுகாப்பு வலயங்கள் என இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

*3.* இந்தக் கட்டளையை செயல்படுத்தும் பணிக்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் உரிய தகுதிவாய்ந்த அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

1A - G 37570 — 366 (2022/09)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

4. (1) எந்தவொரு விசேட சந்தர்ப்பத்திலும் அல்லது தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகளுக்கு அமைய அல்லது அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் ஏதேனும் நடவடிக்கையை கட்டுப்படுத்த உரிய தகுதிவாய்ந்த அதிகாரியால் ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

(2) உரிய தகுதிவாய்ந்த அதிகாரியால் இந்தக் கட்டளையை முறையாக செயல்படுத்துவதற்காக காலத்திற்கு காலம் தேவைப்படக்கூடிய கட்டளைகளை பிறப்பிக்க முடியும்.

(3) (2) உப பிரிவின் கீழ் எவரேனும் ஒருவருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டால் அந்த கட்டளைக்கு இணங்கி செயல்படுவது அந்த நபரின் பணியாக இருக்க வேண்டும்.

5. பொலிஸ் மா அதிபரின் அல்லது மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரின் எழுத்து மூலமான முன் அனுமதி பெறப்பட்டாலன்றி எந்தவொரு நபராலும் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஏதேனும் சாலையில், மைதானத்தில், கடற்கரையில் அல்லது வேறு திறந்த இடத்தில் எந்தவொரு வகையான ஊர்வலம் அல்லது பொதுக்கூட்டம் நடாத்துதல் அல்லது வழிநடத்துதல் செய்யக் கூடாது.

6. (1) அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் ஏதேனும் கட்டிடத்தில், தற்காலிக அல்லது நிரந்தர கட்டுமானங்கள் அல்லது ஏதேனும் அகழ்வுகளை மேற்கொள்ள விரும்பும் எவரேனும் ஒரு நபர் சந்திக்க வேண்டிய பிற சட்டத் தேவைகளுக்கு மேலதிகமாக அதற்காக தகுதிவாய்ந்த அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட அனுமதி பத்திரம் தவிர அந்த கட்டிடத்தில், தற்காலிக அல்லது நிரந்தர கட்டுமானங்கள் அல்லது அகழ்வுகளை மேற்கொள்ளக் கூடாது.

(2) ஒவ்வொரு அனுமதிப் பத்திரத்திலும், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் துல்லியமாக குறிப்பிடப்பட வேண்டும் அத்துடன், அந்த கட்டுமானங்கள் அல்லது அகழ்வுகள் அந்த விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டும்.

(3) (1) உப பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் கோரப்படும் பட்சத்தில் சோதனைக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(4) (1) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளஅதிகாரியால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரியால் வாகனங்களை நிறுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தை தவிர எந்தவொரு நபரும் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் எந்தவொரு வாகனத்தையும் நிறுத்தக்கூடாது.

7. சான்றிதழில் துல்லியமாக குறிப்படப்பட்டுள்ள செயற்பாடுகள் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் நடைபெற்றதாக தகுதிவாய்ந்த அதிகாரியின் கையொப்பத்தின் கீழ் வழங்கப்பட்ட சான்றிதழ், ஆதாரமாக சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பதுடன், அங்கு அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் மேலெழுந்தவாரியாக நோக்கும் பொழுது தென்படும் சாட்சியாக இருத்தல் வேண்டும்.

8. இந்த கட்டளைகளின் ஏற்பாடுகளை பொலிஸ் மா அதிபரின் மூலமாக செயல்படுத்துவது சட்டபூர்வமானது என்பதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் அந்த விடயங்களுக்காக அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் இயந்திர ரீதியாக அல்லது வேறு விதத்தில் ஏதேனும் விடயத்தை செய்வது அல்லது வாகனம் அல்லது வேறு ஏதேனும் ஊடகத்தைப் பயன்படுத்துவது சட்டபூர்வமானதாகும்.

9. (1) எவரேனும் ஒருவர் இந்த கட்டளைகளுக்கு கீழ் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் தவறொன்றை செய்துள்ளார் என்று அல்லது இந்த கட்டளைகளின் ஏற்பாடுகளை மீறியதாக சந்தேகிக்கக்கூடிய எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு காரணம் இருக்கும் சந்தர்ப்பத்தில் அந்தப் பொலிஸ் உத்தியோகத்தரினால் அந்த நபரை சோதனையிட முடியும்.

(2) எவரேனும் ஒருவர் இந்த கட்டளைகளின் பிரகாரம் அல்லது இந்த கட்டளைகளை மீறி அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் தவறொன்றை செய்துள்ளதாக நம்புவதற்கு பொலிஸ் உத்தியோகத்தருக்கு காரணம் இருக்கும் சந்தர்ப்பத்தில், அவ் உத்தியோகத்தரால் அந்த நபரை விசாரணைக்கு உட்படுத்த முடியும்.

(3) இந்த கட்டளைகளை மீறுவது தவறொன்றாக அமைய வேண்டும்.

(4) இந்த கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தவறுகளும் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்றவியல் நடவடிக்கை சட்டக்கோவையின் அர்த்தத்திற்குட்பட்ட மற்றும் அந்தச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக பிடியாணையின்றி கைது செய்யக்கூடிய குற்றமாக கருதப்பட வேண்டும்.

(5) இந்த கட்டளைகளில் ஏதேனும் தவறுகள் தொடர்பாக கைது செய்யப்படும் நபரொருவருக்கு மேல் நீதிமன்றத்தால் தவிர பிணை வழங்கப்படக்கூடாது.

10. (1) அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள ஏதேனும் கட்டிடத்தில் பிரதான குடியிருப்பாளரால் அந்த வளாகத்தில் நிரந்தரமாக அல்லது தற்காலிகமாக வசித்துவரும் அனைத்து நபர்களினதும் பட்டியல் அந்தப் பிரதேசத்திலுள்ள பொலிஸ் நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரியால் உத்தரவிடப்படும் அத்தகைய நேரத்தில்அவருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) (1) உப பிரிவின் பிரகாரம் உத்தரவிடப்பட்டபடி பட்டியல் சமர்ப்பிக்கப்படும் போது, அதிலிருந்து அந்த கட்டிடத்தில் குடியிருப்பாளர்களின் மாற்றங்கள் தொடர்பில், அம் மாற்றம் நிகழ்ந்து 24 மணித்தியாலத்திற்குள் பிரதான குடியிருப்பாளரால் அப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு அறிவிக்கப்பட வேண்டும்.

11. பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தரால் உத்தரவு பிறப்பிக்கின்ற சந்தர்ப்பத்தில் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள அனைத்து அரச திணைக்களங்களில் அல்லது தனியார் நிறுவனங்களில் தொழில் வழங்குநரால் தமது நிறுவனத்தில் சேவையாற்றும் அனைத்து நபர்கள் தொடர்பான விபரங்கள் குறித்த பொலிஸ் நிலையத்தின் நிலைய பொறுப்பதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

12. (1) துணைப் பணிக்காக பொலிஸ் மா அதிபரால் முறையாக அதிகாரம் வழங்கப்படும் பொலிஸ் உத்தியோகத்தரால் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் ஒரு குறிப்பிட்ட வளாகத்திற்குள் நுழைந்து இந்த கட்டளைகளில் 6 ஆவது கட்டளையின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளதா என்பதை ஆராய முடியும்.

(2) இந்த கட்டளைகளில் 6 ஆவது கட்டளையின் ஏற்பாடுகளை மீறி ஏதேனும் செயலொன்றை செய்வதாக கண்டறியப்பட்டால், அவ்வாறு கண்டுபிடித்து ஆய்வு செய்யும் பொலிஸ் உத்தியோகத்தரால் அந்த கட்டுமான நடவடிக்கைகள் அல்லது அகழ்வு நடவடிக்கைகள் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் செய்வதை உடனடியாக நிறுத்துமாறு அந்த கட்டுமானம் மற்றும் அகழ்வு நடவடிக்கைக்கு பொறுப்பான நபர் அல்லது அந்த நடவடிக்கையை மேற்கொள்ளும் எவரேனும் நபருக்கு உத்தரவிட முடியும்.

(3) (2) உப பிரிவின் பிரகாரம் ஏதேனும் கட்டுமான நடவடிக்கைகள் அல்லது அகழ்வு நடவடிக்கைகள் தொடர்ந்தும் மேற்கொள்வதை நிறுத்துவதற்கு உத்தரவிட்ட பின்னர் அந்த பணியை தொடர்ந்து செய்யும் எவரேனும் நபர் இந்த கட்டளையின் கீழான குற்றத்திற்கு குற்றவாளியாக வேண்டும்.

13. ஏதேனும் ஒரு காரணத்திற்காக எந்தவொரு நபராலும் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் பட்டாசுகள் அல்லது ஏதேனும் விளக்கத்திற்கு உரிய வானவேடிக்கைகள் கொளுத்துதல் கூடாது.

14. இந்த கட்டளைகளின் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது இந்த கட்டளைகளின் ஏற்பாடுகளின் கீழ் சந்தர்ப்பத்திற்கு பொறுத்த மானவாறு தகுதிவாய்ந்த அதிகாரி அல்லது எவரேனும் பொலிஸ் உத்தியோகத்தரால் செய்யப்படும் அல்லது வழங்கப்படும் ஏதேனும் உத்தரவுகள் அல்லது ஏற்பாடுகளுக்கு அமைய செயல்பட மறுக்கும் அல்லது தவறும் இல்லாவிடின் இந்த கட்டளைகளின் கீழ் தனது கடமைகளை செய்யும்போது, தகுதிவாய்ந்த அதிகாரியால் அல்லது அவருடைய கட்டளைக்கு அமைய செயல்படுகின்ற எவரேனும் நபரை அல்லது பொலிஸ் உத்தியோகத்தரை தடுக்கின்ற அல்லது குறுக்கீடு செய்கின்ற இல்லாவிடின் அவ்வாறு தடுப்பதற்கு அல்லது குறுக்கீடு செய்வதற்கு வேறொருவரை எதையேனும் செய்ய வைக்கும் எவரேனும் நபரொருவர் இந்த கட்டளைகளின் கீழான குற்றத்திற்கு குற்றவாளியாதல் வேண்டும்.

15. இந்த கட்டளையின் கீழான தவறை செய்கின்ற நபரொருவர் அரச இரகசிய சட்டக்கோவையின் 26 (2) பிரிவிலே குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய நடாத்தப்படுகின்ற வழக்கு விசாரணைகளுக்கு பின்னர் குற்றவாளியாகின்ற போது அந்தப் பிரிவின் கீழ் தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்.

16. பொருள் விளக்கம் –

“பெரஹெர” என்பது 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டத்தில் உள்ள அதே அர்த்தத்தையே கொண்டிருக்க வேண்டும்.

**அட்டவணை - (அ)**

பாராளுமன்ற வளாகம்

வடக்கில் :- பொல்துவ சந்தியில் இருந்து சபாநாயகர் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், கும்புக்கஹதுவ வீதி, ரஜமல்வத்த வீதி, ஜயந்திபுர சந்தி, தியவன்னா நீர்த்தேக்கம் அடங்கலாக ஜயந்திபுர வீதி மற்றும் பாராளுமன்ற வீதி

கிழக்கில் :- ஜயந்திபுர சந்தியில் இருந்து அல்கடாஸ் வாகன தரிப்பிடம், பாராளுமன்ற மைதானம், கியங்னேம் சந்தி, ஜப்பான் நட்புறவு பாலம், பஹலவெல வீதி, கிம்புலாவல சந்தி வரை தியவன்னா நீர்த்தேக்கம் அடங்கலாக

தெற்கில் :- கிம்புலாவல சந்தியில் இருந்து தலவத்துகொட வீதி பின்னியர சந்தி வரை, சுதர்சன மாவத்தை, தஹம் மாவத்தை, கமகே மாவத்தை, ஈயம்போருவ விஹாரை வீதி புறவழிச்சாலை அடங்கலாக பின்னியர வரையிலான பிரதேசம் மற்றும் மாதிவெல பாராளுமன்ற உறுப்பினர் விடுதி, பாராளுமன்ற உறுப்பினர் விடுதிக்கு பின்னால் பிடவேல்ல வீதி, தியவன்னா நீர்த்தேக்கம் அடங்கலாக

மேற்கில் :- பின்னியர சந்தியில் இருந்து பெத்தகான சந்தி வரை தலவத்துகொட வீதி, பெத்தகான வீதி, பொல்துவ வீதி, வெஹெரகந்த வீதி, பெத்தகால, நிபோன் வீதி வழியாக பொல்துவ சந்தி வரை தியவன்னா நீர்த்தேக்கம் அடங்கலாக

**(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்ளுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)**

**அட்டவணை - (ஆ)**

**உயர் நீதிமன்ற வளாகம், மேல் நீதிமன்ற வளாகம் கொழும்பு, நீதிவான் நீதிமன்ற வளாகம் கொழும்பு மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களம்**

வடக்கில் :- டாம் வீதி, அளுத்கடை வீதியில் இருந்து பெல்மன் வீதி வரைக்கும்

கிழக்கில் :- பெல்மன் வீதியிலிருந்து சாஞ்சி ஆராச்சி வத்த வீதி, அதிகரன மாவத்தை சந்தி வரை

தெற்கில் :- பார்சல் சுற்றுவட்டம், சாஞ்சி ஆராச்சி வத்த வீதி

மேற்கில் :- புனித செபஸ்டியன் கந்த வீதி, மிஹிது மாவத்தை, புனித செபஸ்டியன் வீதி

**(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)**

**அட்டவணை - (இ)**

**சனாதிபதி செயலாளர் அலுவலகம், சனாதிபதி மாளிகை, கடற்படை தலைமையகம் மற்றும் பொலிஸ் தலைமையகம்**

வடக்கில் :- NSA சுற்று வட்டத்தின் ஊடாக சைத்திய வீதியை நோக்கி பொலிஸ் தலைமையகம் வரை

கிழக்கில் :- யோர்க் வீதி மற்றும் லோட்டஸ் வீதி சந்தியில் இருந்து ரீகல் திரையரங்கம், பேரே வாவி, மோகன் வீதி, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை வரை

தெற்கில் :- ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை, காலிமுகத்திடல் வீதி, அக்பர் மாவத்தை பாலத்தில் இருந்து பழைய இராணுவ தலைமையகத்தின் மேற்கு எல்லை வரை சாரணர் மாவத்தை அடங்கலாக

மேற்கில் :- சைத்திய வீதி சந்தியில் இருந்து காலிமுகத்திடல் சுற்றுவட்டம் வரையிலான வீதி மற்றும் அதற்கு உரிய கடற்கரை

**(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)**

**அட்டவணை - (ஈ)**

**அகுரேகொட பாதுகாப்பு அமைச்சு மற்றும் இராணுவ தலைமையகம்**

வடக்கில் :- பாதுகாப்பு அமைச்சு மாவத்தை

தெற்கில் :- தியவன்னா பூங்கா மாவத்தை

மேற்கில் :- பெரேரா மாவத்தை, பாடசாலை மாவத்தை, தேசிங்க மாவத்தை, லெப்டினன்ட் கர்னல் அசோக மாவத்தை, டீ .ஜீ. விஜேசிங்ஹ மாவத்தை

**(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)**

**அட்டவணை - (உ)**

**விமானப்படை தலைமையகம் (கொம்பனித் தெரு)**

வடக்கில் :- சித்தம்பலம் ஏ காடினர் மாவத்தை, பேரே வாவி

கிழக்கில் :- பேரே வாவி, மோகன் வீதி

தெற்கில் :- கிவ் வீதி, குமாரரத்னம், ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை

மேற்கில் :- ரீகல் திரையரங்கில் இருந்து ஜஸ்டிஸ் அக்பர் மாவத்தை வரை பேரே கால்வாய் வழி

**(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)**

**அட்டவணை - (ஊ)**

**பிரதமரின் செயலாளர் அலுவலகம் (மல் வீதி)**

வடக்கில் :- உள்ளே மல் வீதியும்,

கிழக்கில் :- சார் ஏர்னஸ்ட் த சில்வா மாவத்தை (மல் வீதி)

தெற்கில் :- 5 ஆவது ஒழுங்கை

மேற்கில் :- 27 ஆவது ஒழுங்கை

**(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)**

**அட்டவணை - (எ)**

**அலரி மாளிகை (கொள்ளுப்பிட்டி)**

வடக்கில் :- காலி வீதி றொடுண்டா சந்தியில் இருந்து றொடுண்டா சுற்றுவட்ட வீதி வழியாக பெரஹெர மாவத்தை அல்விஸ் வீதி வரைக்கும்,

கிழக்கில் :- தர்மபால மாவத்தை அல்விஸ் வீதி சந்தி, அல்விஸ் வீதி,பெரஹெர மாவத்தை சந்தி வரைக்கும்,

*தெற்கில் :-* *கொள்ளுப்பிட்டிய புகையிரத நிலைய கடற்கரையில் இருந்து புகையிரத நிலைய வீதி, கொள்ளுப்பிட்டி சந்தி, தர்மபால மாவத்தை, லிபர்ட்டி சுற்றுவட்டம், அல்விஸ் வீதி சந்தி வரைக்கும்,*

*மேற்கில் :-* *கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து காலி வீதி ரொடுன்டா சந்தி வரையிலான பகுதி வரைக்கும்,*

***(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)***

***அட்டவணை - (ஏ)***

**பாதுகாப்பு செயலாளர் மற்றும் முப்படைத் தளபதிகளின் உத்தியோகபூர்வ இல்ல பிரதேசம்**

*வடக்கில் :-* *பௌத்தாலோக மாவத்தை, ஜாவத்தை சந்தி, ஜாவத்தை வீதி கெப்பட்டிபொல மாவத்தை சந்தி வரைக்கும்,*

*கிழக்கில் :-* *கெப்பட்டிபொல மாவத்தை ஸ்ரீ சம்புத்த ஜயந்தி மாவத்தை சந்தியில் இருந்து ஸ்ரீ சம்புத்த ஜயந்தி மாவத்தை, தும்முல்ல சந்தி வரைக்கும்,*

*தெற்கில் :-* *கெப்பட்டிபொல மாவத்தை சந்தியில் இருந்து கெப்பட்டிபொல வீதி, ஸ்ரீ சம்புத்த ஜயந்தி மாவத்தை சந்தி வரைக்கும்,*

*மேற்கில் :-* *தும்முல்ல சந்தியில் இருந்து பௌத்தாலோக மாவத்தை ஜாவத்தை வீதி சந்தி வரைக்கும்,*

*( இந்த பிரதேசத்திற்கு உரிய உள்ளக வீதி - ஸ்டெமோர் சந்ரவங்கய, பெகென்ஸி வீதி, பெஜட் வீதி மஹகமசேகர மாவத்தை)*

***(இந்தப் பகுதிக்குள் அமைந்துள்ள தூதரகங்களுக்கு சொந்தமான இடங்களைத் தவிர)***

EOG *09 - 0246*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*